பொருளடக்கம்

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 11

அறிமுக உரை 15

முன்னுரை 17

1 இஸ்லாம் – ஒரு கருத்தாய்வு 21

இஸ்லாம் மார்க்கம் எவ்விதம்
நடுநிலை மார்க்கமாக திகழ்கிறது? 24

யூத கிறித்துவ மதங்களிடையே இஸ்லாம் நடுநிலை
வகிப்பதன் விவரம் 25

பிற மார்க்கங்களிடையே இஸ்லாமின் நடுநிலை 31

2 செயல்கள் சம்பந்தமான விசயங்களில் இஸ்லாமின்
நடுநிலைப்போக்கு 50

3 அன்றாட பழக்க வழக்கங்களில் நடுநிலை 63

முடிவுரை 68

யூத கிறித்துவ மதங்களிடையே இஸ்லாம் நடுநிலை வகிப்பதன் விவரம்

முதலாவது: கொள்கை சம்பந்தமான விசயங்களில்

1. யூத மதம்: நபி மூஸா ﷺ அவர்கள் போதித்த மார்க்கம் இறைவனால் அருளப்பட்ட மார்க்கமாக இருந்தது. யூதர்களில் அவரைப் பின்பற்றியோர் அதனை மார்க்கமாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அல்லாஹ் அவரை அந்தக் காலகட்டத்தில் நபியாகத் தேர்ந்தெடுத்து சிறப்பித்திருந்தான். எனினும், அது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. முஹம்மது நபி ﷺ அல்லாஹ்வினால் இறைத்தூதராக அனுப்பி வைக்கப்பட்டதும் அம்மார்க்கம் முடிவுக்கு வந்து காலாவதியாகிவிட்டது.

யூதமதத்தில் அவர்களது இறைத்தூதர்கள் மரணித்த பிறகு, சட்டங்களில் மாற்றங்கள் செய்தார்கள் அதனைப் பின்பற்றியவர்கள். சுயக் கருத்துக்களைப் புகுத்தினார்கள். ஆனால், அல்லாஹ் இந்த இஸ்லாமிய மார்க்கத்தைப் பாதுகாக்க முழுப்பொறுப்பு ஏற்றுள்ளான். எனவேதான், அல்லாஹ் தனது வேதத்தில் கூறியுள்ளான்:

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ

'நாமே இந்தக் குர்ஆனை இறக்கி வைத்தோம். மேலும், நாமே இதனைப் பாதுகாப்போம்.' (குர்ஆன் 15:9)

இதன் மூலமாக சுயக் கருத்துகளைத் திணிக்கவோ அதிகப்படுத்தவோ குறைக்கவோ மாற்றங்களை ஏற்படுத்தவோ முடியாதவாறு இந்த மார்க்கத்தைப் பாதுகாக்க அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொண்டான். ஏனைய மார்க்கங்களைப் பொறுத்தமட்டில் அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு அதன் அறிஞர்களிடமும் அந்தச் சமுதாயத்தின் மத குருமார்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து அல்லாஹ் தன் வேதத்தில் இவ்விதம் கூறுகின்றான்:

وَالرَّبَّانِيُّونَ وَالْأَحْبَارُ بِمَا اسْتُحْفِظُوا مِنْ كِتَابِ اللَّهِ وَكَانُوا عَلَيْهِ شُهَدَاءَ

'அவர்களுடைய பண்டிதர்களும் குருமார்களும் அல்லாஹ்வின் வேதத்தைக் காப்பவர்கள் என்ற முறையில் தீர்ப்பளித்து வந்தார்கள். அதற்குச் சாட்சிகளாகவும் இருந்தார்கள்.' (குர்ஆன் 5:44)

இதுவே முந்தைய மார்க்கங்களில் இடைச்செருகல்களும், மாறுபாடுகளும் ஏற்படக் காரணமாயிற்று. அவை பொறுத்தமற்ற

பின்னர் கிறித்துவர்கள் வந்தார்கள். அதிகப்படியாகவும் வரம்பு மீறியும் செயல்பட்டனர். மர்யமின் மகன் ஈஸாவை அவரது தகுதியை மீறி அந்தஸ்து கொடுத்து அவரை உயர்வாக சித்தரித்தார்கள். அவர்கள் பற்றி அல்லாஹ் தன் வேதத்தில் கூறுகின்றான்:

لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ هُوَ الْمَسِيحُ ابْنُ مَرْيَمَ

'மர்யமின் மகன் மஸீஹ் தான் அல்லாஹ் என்று கூறியவர்கள் நிராகரித்துவிட்டனர்.' (குர்ஆன் 5:17)

மேலும், அல்லாஹ் கூறியுள்ளான்:

وَقَالَتِ النَّصَارَى الْمَسِيحُ ابْنُ اللَّهِ

'மஸீஹ் அல்லாஹ்வின் குமாரர் என்று கிறித்துவர்கள் கூறுகிறார்கள்.' (குர்ஆன் 9:30)

இவ்விதம் கூறுவதின் மூலம் கிறித்துவர்கள் அல்லாஹ்வை மூன்றில் ஒருவனாக வருணித்து அவனை நிராகரித்துவிட்டனர். அதாவது அல்லாஹ், ஈசா, அவரது தாயார் மர்யம் ஆகிய மூவரில் அல்லாஹ்வை மூன்றாமவனாக நம்பிக்கைகொண்டனர். இது குறித்த ஆதாரம் மறுமையில் ஈசாவை நோக்கிக் கேட்கப்படுகின்ற பின்வரும் கேள்வியில் உள்ளது. அல்லாஹ் கேட்பான்:

أَأَنْتَ قُلْتَ لِلنَّاسِ اتَّخِذُونِي وَأُمِّيَ إِلَهَيْنِ مِنْ دُونِ اللَّهِ

'அல்லாஹ்வை விடுத்து என்னையும் என் அன்னையையும் கடவுள்களாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று நீர் மக்களிடம் சொன்னீரா?' (குர்ஆன் 5:116)

3. இஸ்லாம் மார்க்கம்: பிறகு இஸ்லாம் வந்தது. அவ்விரு மதங்களிடையே நடுத்தரமாக விளங்கியது. அதில் வரம்பு மீறலும் இல்லை; குறைபாடுகளும் கிடையாது.

ஈசாவே அல்லாஹ் என்றோ அல்லது அவர் அல்லாஹ்வின் குமாரர் என்றோ அல்லது மூவரில் மூன்றாமவர் என்றோ கிறித்துவர்கள் கூறி அதிக அந்தஸ்து கொடுத்து செயல்பட்டது போன்ற வரம்பு மீறுதல்

இவரின் 'அல்பிதாயா வந்நிஹாயா' எனும் வரலாற்று ஆராய்ச்சி நூல், உலகத்தின் தோற்றம் முதல் அவர் வாழ்ந்த காலம் வரையிலான இஸ்லாமிய வரலாற்றை விரிவாகக் கூறுகிறது. ஹிஜ்ரீ 774 (கி.பி. 1372) ஷஅபான் திங்கள் 26, வியாழக்கிழமை மரணித்தார்.

2

செயல்கள் சம்பந்தமான விசயங்களில் இஸ்லாமின் நடுநிலைப்போக்கு

இஸ்லாமிய மார்க்கம் சில செயல்களை நமக்கு அழகிய முறையில் சொல்லித் தருகிறது. ஆனால், சிலரிடம் ஷைத்தான் மிகைத்தன்மையையும், வரம்புமீறுதலையும், அதிகப்படுத்தலையும் நுழைத்து விட்டான். அவ்விதமே வேறு சிலரிடம் குறைவு செய்தல், விரயம் மற்றும் மாசுபடுத்துதல் ஆகிய தன்மைகளைப் புகுத்தினான். அவையெல்லாம் ஷைத்தான் ஏற்படுத்திய ஊசலாட்டங்களாகும். மேலும், அவர்களுக்கு ஆசையூட்டி மயக்கியதன் விளைவாகும். மார்க்கத்தை உண்மையான முறையில் உள்ளபடியே செயல்படுத்த விடாமல் தடுப்பதே அவனது திட்டமாகும். அதற்கான சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

1. தூய்மை

தூய்மையானது மார்க்கம் சார்ந்த வணக்கமாகும். அல்லாஹ்தஆலா சுத்தம் பேணுமாறு தன்னை நம்பிக்கைகொண்ட அடியார்களுக்கு ஆணையிட்டுள்ளான். எனினும், அதனையும் நடுத்தரமான செயலாகவே ஆக்கியுள்ளான். அதில் வீண்விரயமோ குறைத்துச் செய்வதோ கிடையாது.

தூய்மை விசயத்தில் இரண்டு வேறுபட்ட பிரிவினர் இருக்கிறார்கள். முதலாமவர்கள் மிதமிஞ்சி வீண்விரயம் செய்கிறார்கள். இன்னொரு பிரிவினர் அலட்சியம் காட்டி குறைவு செய்கிறார்கள்.

வீண்விரயம் செய்வோர் தூய்மை பாடத்தில் இல்லாதவற்றை மிகைப்படுத்திச் செய்கிறார்கள். அதில் கடுமையாகவும் மிகையாகவும் செயல்படுகிறார்கள். எந்த அளவிற்கெனில் நபி ﷺ மற்றும் அவர்களது தோழர்களின் செயல்கள், வுளூ, குளிப்பு மற்றும் அதைச் சார்ந்த செயல்கள், அவர்கள் தூய்மை செய்த விதம்

இவ்விதமே உடலில் குறிப்பாக பாதங்களில் தண்ணீர் படாமல் போன பகுதிகளை நாம் கழுவ வேண்டும் என்ற ஆர்வத்தைப் பின்வரும் நபிமொழிகள் ஏற்படுத்துகின்றன.

وَيْلٌ لِلأَعْقَابِ مِنَ النَّارِ

'தண்ணீர் படாதிருக்கும் குதிங்கால்களுக்கு கேடுதான்!' (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு அமர் ﷺ, புகாரீ 60, முஸ்லிம் 241)

மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளது:

وَيْلٌ لِلْأَعْقَابِ وَبُطُونِ الْأَقْدَامِ مِنَ النَّارِ

'குதிங்கால்களுக்கும் பாதங்களின் நடுப்பகுதிகளுக்கும் நரகத்தினால் அழிவுதான் கிடைக்கும்.' (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ﷺ, திர்மிதீ 41, ஸஹீஹுத் தர்ஙீப் வத்தர்ஹீப் 220)

எவர்கள் தங்களது பாதங்களைக் கவனமாகக் கழுவாமல் இலேசாக கழுவுகிறார்களோ பெரும்பாலும் அவர்களது குதிங்கால்களில் சில குறிப்பிட்ட பகுதியில் தண்ணீர் படுவதில்லை. அதனால் வுளூ வீணாகிவிடுகிறது. தூய்மையில் குறைவு செய்யும் விசயத்தில் இவர்கள் வரம்பு மீறியவர்கள் ஆவார்கள். மேலும், இவர்கள் குறைவு செய்தார்கள்; கடினப்போக்கைக் கையாண்டனர்.

இஸ்லாம் மார்க்கம் நடுத்தரமான முறையில் இதனைப் போதித்தது. அது பற்றிய விவரம் யாதெனில், ஒரு மனிதர் முழுமையாக வுளூ செய்கிறார். அப்போது முழுமையாகவும் திருப்தியாகவும் ஒரு முறை கழுவுவதே போதுமானதாகும். இரண்டாவதாகக் கழுவினால் அதுவும் சிறந்ததே. மூன்றாவதாகக் கழுவினால் இரண்டைவிட மிக சிறந்தது. மூன்று தடவைக்கும் அதிகமாகக் கழுவுவது கூடாது. மூன்றிற்கும் அதிகமாகக் கழுவுவது என்பது வீணானதாகவும் மிகையானதாகவும் கருதப்படுகிறது. பத்து தடவைகள் கழுவுவோரைப் பற்றி என்ன சொல்வது?

2. சிறுநீர், மலம் கழித்துவிட்டுச் சுத்தம் செய்தல் மற்றும் அசுத்தங்களை அகற்றுதல்

இவ்விதமே சிறுநீர் மற்றும் மலம் கழித்த பிறகு கழுவுவது குறித்த பாடத்தில் அதிகப்படியாக ஏழு முறை கழுவுமாறு கூறப்பட்டுள்ளது. எனினும், அவர்களில் ஒருவர் பத்து தடவைகள் கழுவுவதைக் காணலாம். அதனால் அவரது பிறப்புறுப்பில் பல தடவைகள்

3

அன்றாட பழக்க வழக்கங்களில் நடுநிலை

சகோதரா! உணவு, பானம், ஆடையணிதல் மற்றும் இவை போன்ற அன்றாடப் பழக்க வழக்கங்கள் உட்பட அனைத்திலும் நடுநிலை யான அளவுகோலையே நீ பின்பற்ற வேண்டும். ஏனெனில், இஸ் லாம் இவ்விசயங்கள் அனைத்திலும் நடுநிலையையே கையாண் டது. இவ்விசயங்களை தெளிவுபடுத்திட சில எடுத்துக்காட்டுகளைச் சுருக்கமாகத் தருகிறோம்.

1. ஆடையணியும் விசயத்தில்

ஆடைகள் மக்களுக்காக அல்லாஹ் அருளிய மாபெரும் அருட் கொடை மற்றும் அலங்காரம் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. அல்லாஹ் அதனை தன் அடியார்களுக்காக அருளினான். தன் வேதத்தில் அவன் கூறுகின்றான்:

يَا بَنِي آدَمَ قَدْ أَنْزَلْنَا عَلَيْكُمْ لِبَاسًا يُوَارِي سَوْآتِكُمْ وَرِيشًا

‘ஆதமின் மக்களே! உங்கள் வெட்கத்தலங்களை மறைக்கும் ஆடையையும் அலங்காரத்தையும் உங்களுக்கு இறக்கியுள் ளோம்.’ (குர்ஆன் 7:26)

ஆடையணியும் விசயத்தில் மக்கள் மூன்று வகையினராக இருக் கிறார்கள். இரண்டு பிரிவினர் முரண்பட்ட பிரிவினர் ஆவார்கள். மூன்றாவது பிரிவினர் நடுநிலையைக் கையாள்வோர் ஆவார்கள்.

முதல் பிரிவினர்: இவர்கள் ஊதாரித்தனமாகவும் விரயமாகவும் செலவழித்து வீணடிப்போர் ஆவார்கள். இத்தகையோர் ஆணா யினும் பெண்ணாயினும் நூற்றுக்கணக்கில் அல்லது சில வேளை களில் ஆயிரக்கணக்கில் சிரமம் மேற்கொண்டு ஆடைகளை வைத்துக்கொண்டிருப்பார்கள்.

குறைவாகவோ இன்றி நடுநிலையை மேற்கொள்வதே சிறந்த அம்சமாகும்.

2. உணவு உண்ணுதல், பானங்கள் பருகும் விசயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை

பொதுவாக உணவு மற்றும் பானங்களிலும் நடுத்தரமே வேண்டப் படுகின்றது. மக்களில் அதிகமானோர் விரயம் செய்வதைக் காண்கி றோம். வகைவகையான உணவுகளை ஒன்றுதிரட்டுவார்கள். எல்லாமே வீணாகப் போகும். அதிலிருந்து மிகக்குறைந்த அளவு உணவே உட்கொள்ளப்படும். இன்னொரு பிரிவினரின் நிலை யாதெனில் அவர்களிடம் செல்வங்கள் இருக்கும்; எனினும், அவர்களிடம் கஞ்சத்தனமும் உலோபித்தனமும் குடிகொண்டிருக் கும். தங்களுக்காகவும் தங்களின் பிள்ளைகளுக்காகவும் மிகக் குறைவாகவும் அற்பமாகவும் செலவழிப்பார்கள். செல்வங்கள் இருந்தும் பசி பட்டினியுடன் தங்குவார்கள். கரடுமுரடாகவும் கண்டிப்பாகவும் வாழ்ந்து குறைந்த அளவு உணவையே உண் பார்கள். அவர்களிடம் செல்வம் இருந்தாலும் தங்களுக்காக மிகக் குறைந்த அளவில் அற்பமாகவே செலவழிப்பார்கள். செல்வத்தைக் குவிப்பதிலும் பெருக்குவதிலும் ஒன்றுசேர்ப்பதிலும் கவனம் செலுத்துவார்கள். மார்க்கம் நடுத்தரமானது. அதில் கஞ்சத்தனமோ ஊதாரித்தனமோ கிடையாது. அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِينَ إِذَا أَنْفَقُوا لَمْ يُسْرِفُوا وَلَمْ يَقْتُرُوا وَكَانَ بَيْنَ ذَٰلِكَ قَوَامًا

'அவர்கள் செலவு செய்யும்போது விரயம் செய்யமாட்டார்கள். கஞ்சத்தனமும் செய்யமாட்டார்கள். அதற்கு இடைப்பட்ட நிலையாகவே அது இருக்கும்.' (குர்ஆன் 25:67)

3. உலக நடவடிக்கைகளில் மக்களின் நிலை

உலக செயல்பாடுகளில் மக்கள் மூன்று வகையினராக பிரிகிறார்கள்.

ஒரு பிரிவினர்: உலக வாழ்க்கையைப் பிரதானமானதாகவும் செழுமையாகவும் கருதி அந்த விசயங்களுக்கு மிகுந்த கண்ணியம் கொடுக்கிறார்கள். அதன் பக்கம் ஒரேயடியாகச் சாய்ந்து அதன்மீது மோகம்கொள்கிறார்கள். உலக நடவடிக்கைகளை மிகப் பெரும் கவலை தருகின்ற விசயமாகவும் தங்களது அறிவின் பரிமாணமாக வும் (அளவீடாகவும்) ஆக்கிக் கொண்டுவிட்டனர். எனவே, தங் களது முழுநேரத்தையும் அதில் ஈடுபடுத்துகிறார்கள். இத்தகையோர்